# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● டிசம்பர் 23, 2023

Weekly E-paper ● December 23, 2023




# ஆணவத்தின் மறுபெயர் நிர்மலா சீதாராமன்!

சுப.வீரபாண்டியன்

## கொள்கையாய் வாழ்கிறார் தந்தை பெரியார்!

மா.உதயகுமார்

## திருவைகுண்டம்! புதுடில்லி?

தலையங்கம்

## புறமுதுகிட்டோடும் மோடியும், அமித்ஷாவும்!

சாரததேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● டிசம்பர் 23, 2023

Weekly E-paper ● December 23, 2023


# ஆணவத்தின் மறுபெயர் நிர்மலா சீதாராமன்!

**சுப.வீரபாண்டியன்**

ஒரு நூற்றாண்டு காணாத அளவிற்குக் கொட்டித் தீர்த்திருக்கும் மழையால், அல்லல்படும் மக்களுக்கு ஆதரவாக உதவிகள் கோரியும், இதனைத் தேசியப் பேரிடர் என அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அறிக்கை விடுத்துள்ளார்.


## திராவிட முழக்கம்

**வெளியீட்டு விழா**

நாள்: 29:12:2023 (வெள்ளிக்கிழமை)
நேரம்: மாலை 6 மணி

இடம்: முத்தமிழ்ப் பேரவை
- TN இராஜரெத்தினம் அரங்கம்,
அடையாறு, சென்னை - 600 020,
பழைய சத்யா ஸ்டுடியோ எதிரில்

முதல் இதழ் வெளியிட்டுச் சிறப்புரை:
திரு. **ஆ.இராசா.** எம்.பி.

பெற்றுக்கொள்பவர்:
மாண்புமிகு அமைச்சர்
**மனோ தங்கராஜ்**

வாழ்த்துரை:
திருமிகு **நக்கீரன் கோபால்**
வழக்கறிஞர் **அருள்மொழி**
திருமிகு **நவாஸ் கனி,** எம்.பி.
நடிகர் **இளவரசு**


இது போன்ற தருணங்களில் மாநில அரசுகள் ஒன்றிய அரசிடம் நிதி கேட்பதும், சற்றுக் கூடுதல் குறைவாக ஒன்றிய அரசு நிதி வழங்குவதும் இயல்பானவை! இப்போது தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப் படாதவர் என்றாலும், தமிழ்நாட்டில் பிறந்த நிர்மலா சீதாராமன் நிதி அமைச்சராக இருக்கும்போது, உடனடியாக உதவிகள் கிடைக்கும் என்று பலரும் நம்பி இருக்கக்கூடும்!

ஆனால் நிர்மலா சீதாராமனின் பேச்சும், அந்த எரிச்சல் மொழியும், வெந்த புண்ணில் வேல் எடுத்து வீசுவதாகவே இருக்கிறது. எந்த ஒரு மாநிலத்தில் நடக்கும் துயரத்தையும், தேசியப் பேரிடர் என்று அறிவிக்க முடியாதாம்! ஏன்? மாநிலம் என்பது, அவர்கள் சொல்கிற அந்த "ஒரே தேசத்தில்" இல்லையோ? இந்தியா முழுவதும் ஒரே நேரத்தில் இடர் ஏற்பட்டால் மட்டும்தான், அது பேரிடர் போலும்!

அள்ளிக் கொடுக்க வேண்டாம், ஆறுதல் மொழியாவது கூறியிருக்க வேண்டும்! ஆனால் அவர் உதிர்த்த சொற்கள் மட்டும் இல்லை, அதை அவர் உதிர்த்த விதமும் தமிழ்நாட்டின் மீதும், தமிழ்நாடு அரசின் மீதும் அவருக்கு இருக்கிற எரிச்சலைத்தான் வெளிப்படுத்துகிறது.

இந்திய அரசின் நிதி அமைச்சரின் பேச்சில் பரிவும் இல்லை, கண்ணியமும் இல்லை! இவ்வளவு துயரத்தில் மக்கள் சிக்கித் தவிக்கும் போதும், அவர் இப்படிப் பேசுகிறார் என்றால், அவர்



தமிழ்நாட்டையும் தமிழ்நாட்டு மக்களையும் அவமதிக்கிறார் என்பதுதான் பொருள்! அவர் எந்தத் தேர்தலிலும் போட்டியிடப் போவதில்லை, மக்களிடம் வாக்குகளைக் கேட்கப் போவதுமில்லை. தேர்தலைச் சந்திக்காமலேயே இந்தியாவின் பெரிய பெரிய பதவிகளில் அவரால் அமர்ந்து விட முடிகிறது. அதனால் மக்களை மதிக்க வேண்டிய தேவை தனக்கு இல்லை என்று அவர் கருதுகிறார் போலும்!

இந்த நிலையில், எப்படிப் பேச வேண்டும் என்று அமைச்சர் உதயநிதிக்குப் பாடம் வேறு எடுக்கிறார். "அவர் தாத்தா எவ்வளவு பெரிய தமிழறிஞர்!" என்று கேலி பேசுகிறார். இவர் சொன்னாலும், சொல்லவில்லை என்றாலும், அவர் தமிழறிஞர் - முத்தமிழறிஞர்தான். அதனை யாரும் மறுக்க முடியாது!

அவர் ஏன் இப்படிப் பேசுகிறார் என்றால், அதற்கு ஒரே ஒரு விடைதான் உண்டு. ஆம், ஆணவத்தின் மறுபெயர் நிர்மலா சீதாராமன் என்பதுதான் அந்த விடை! ●


# கொள்கையாய் வாழ்கிறார் தந்தை பெரியார்!

## மா.உதயகுமார்

தந்தை பெரியாரின் நினைவு நாள், அவர் மறைந்த ஆண்டுகளின் எண்ணிக்கையை மட்டும் நமக்கு நினைவுபடுத்துவதன்று. அவர் மறைந்து 50 ஆண்டுகள் ஆனபோதும் தன்னுடைய கொள்கைகள் மூலம் இன்றும் உயிர்ப்போடு வாழ்ந்து கொண்டிருப்பதையும் உணரச் செய்கிறது. ஒவ்வொரு ஆண்டும் தந்தை பெரியாரின் கொள்கைகளின் தேவை சமூகத்தில் அதிகரித்துக் கொண்டேதான் இருக்கிறது.

அத்தகைய வலிமையான கொள்கைகளைத் தன்னுடைய வாரிசாக தந்தை பெரியார் நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்.

சுயமரியாதை எனும் கொள்கையின் அடிப்படையில் அவர் முன்னெடுத்த ஜாதி ஒழிப்பு, பெண் விடுதலை, தமிழர் விடுதலை, பகுத்தறிவு, மானுட விடுதலை ஆகியவை இன்று உலகம் தழுவும் கொள்கைகளாக உருவெடுத்திருக்கின்றன.



சமூக சீர்திருத்தத்திற்காகவும், விடுதலைக்காகவும் உலகெங்கும் போராடிய தலைவர்கள் யாரும், நாம் வரலாற்றில் அறிந்த வரையில், பார்ப்பனர்களைப் போன்ற நேர்மையற்ற எதிரிகளை எதிர்த்துப் போராடியிருக்க மாட்டார்கள். இந்த அளவிற்கு நேர்மையற்ற எதிரிகளை எதிர்த்துக் களம் கண்டபோதும் பெரியார் வெறுப்புணர்வையோ வன்முறையையோ எந்த இடத்திலும் விதைத்ததில்லை.

அதற்காக எந்த இடத்திலும் அவர் கொள்கையில் சமரசம் செய்ததில்லை. இன்றுவரையிலும் அந்தச் சமரசமற்ற நாத்திகமும், கடவுள் மறுப்பும், பகுத்தறிவும் பார்ப்பனரல்லாதார் இயக்கமுமே

பெரியாரை எதிரிகளால் நெருங்க முடியாத நெருப்பாக வைத்திருக்கிறது.

இன்று அயோத்தியில் இராமர் கோவில் கட்டி மிகப் பெரிய அளவில் பார்ப்பனிய அரசியலை, இந்துத்துவ வெறியை நாடெங்கும் பார்ப்பனர்கள் பரப்பி வருகின்றனர். தமிழ்நாடு தவிர்த்த மற்ற மாநிலங்களில் அரசியல் ரீதியாக பாஜகவை எதிர்க்கும் கட்சிகள் கூட சனாதனம், இராமர் கோவில் ஆகியவற்றில் அவர்களை ஒத்த கருத்துகளையே கொண்டவர்களாக இருப்பதை நாம் பார்க்க முடிகிறது.

ஆனால் தமிழ்நாட்டில் இந்த அரசியல் எடுபடாததற்கு, தந்தை பெரியார் கண்ட சமூகப் புரட்சி இயக்கமே காரணம் என்பதை உறுதியாகக் கூற முடியும். சமூக இயக்கங்களின் பங்களிப்பில்லாமல் அரசியல் ரீதியாக மட்டுமே பா.ஜ.கவை எதிர்க்க நினைப்பவர்கள் பார்ப்பனிய வலைக்குள் சிக்கி விடுகிறார்கள்.

இந்தியாவின் மற்ற பகுதிகளில் ஜாதியை எதிர்த்துப் போராடிய சமூக சீர்திருத்தவாதிகள் தோன்றியிருந்த போதிலும், சனாதனத்தையும், இந்துத்துவத்தையும் தமிழ்நாட்டளவிற்கு எதிர்க்கும் மனநிலை அப்பகுதிகளில் உருவாகவில்லை.

தந்தை பெரியார் மட்டும் கடவுள் விசயத்திலோ, மத விசயத்திலோ கொஞ்சம் நெளிவு சுழிவுகளோடு இயக்கத்தை நடத்தி இருந்தாரெனில் இன்று இங்கேயும் இராமர் கோவில் அரசியல் புகுந்திருக்கும். தந்தை பெரியாரையும் பார்ப்பனியம் உள்வாங்கிச் செரித்திருக்கும்.

அப்படிப்பட்ட பெரியாரின் கொள்கைகளைச் சிலர் முற்போக்கு முகமூடி அணிந்தே திரித்துப் பரப்பி வருகின்றனர். ஜாதியை ஒழிக்கப் போராடிய அவரை ஆதிக்க ஜாதி உணர்வுடையவர் என்று பரப்புரை செய்கிறார்கள். கடவுளையும் மதத்தையும் ஒழிக்கப் பாடுபட்டவரை மதமாற்றத்தையும், பகுத்தறிவு மதத்தையும் ஏற்றுக் கொண்டவராகவும் வியாக்கியானங்களைக் கொடுக்கிறார்கள். தனியுடைமைக் கொள்கைகளைத் தொடர்ந்து எதிர்த்து வந்தும், தனக்கென எந்த சொத்துகளையும் வைத்துக் கொள்ளாது வாழ்ந்தவரை நிலப்பிரபுத்துவ சீர்திருத்தவாதி என்று சொன்னார்கள். தமிழர் விடுதலைக்காக தன்னுடைய இறுதிப் பேருரை வரை குரல் கொடுத்தவரை, தமிழர்க்கு எதிரியாகச் சித்தரிக்கின்றனர். பெரியாரின் கொள்கைகளை எதிர்க்கவும் முடியாமல், ஊடுருவி அழிக்கவும் முடியாமல், இது போன்ற திரிபு வாதங்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ பார்ப்பனியம் பின்னணியிலிருந்து இயக்கிக் கொண்டிருக்கிறது

தந்தை பெரியாரின் கொள்கை இது போன்ற திரிபுகளால் திசைமாறக் கூடியதன்று. அது உண்மையின் வழியில் விடுதலைக்கான திசையைக் காட்டுவதாகும்.

தமிழர் தலைவராவும், உலகத் தலைவராகவும் தந்தை பெரியார் என்றும் போற்றப்படுவார்!

(டிசம்பர் 24, பெரியார் நினைவுநாள்) ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## திருவைகுண்டம்! புதுடில்லி?

தமிழ்நாட்டின் வடக்குக் கடற்கரைப் பகுதியை எட்டிப்பார்த்து விட்டு நெல்லூருக்கு அருகில் கரையக் கடந்த மிக்ஜாம் புயலின் தாக்கத்தால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மூன்று மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் மிகக் கடுமையானது.

இவைகளுக்கு உரிய நிவாரண உதவிகளை தமிழ்நாடு அரசு செய்துமுடிக்கும் முன்னரே மிகக்கடுமையான கனமழையினால் திருநெல்வேலி, தூத்துக்குடி உள்ளிட்டச் சில தென்மாவட்டங்களின் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நெல்லை மாவட் டம், திருவைகுண்டம் இரயில்நிலையத்தில் நுழைந்த விரைவு இரயில் அங்கிருந்து புறப்பட முடியாமல் அப்படியே எந்த ஒரு தொடர்பும் இல்லாமல் நின்றுவிட்டது இரண்டு நாட்களாக. அரசின் உதவி கூட பெற முடியாத நிலையில் பசி, பட்டினியோடு அந்த இரயிலில் இருந்த ஆண்கள், பெண்கள், முதியோர், குழந்தைகள் உள்ளிட்ட 800 பேர்களின் நிலை என்னவாக இருந்திருக்கும்?

அவர்களில் ஒருவர் தொலைக் காட்சியில் இப்படிச் சொல்கிறார்,"பக்கத்தில் இருந்த கிராம மக்கள், ரயில் நிலையத்தின் அருகில் இருந்த பத்ரகாளியம்மன் கோவிலில் திங்கட்கிழமை காலையிலிருந்து இன்று (செவ்வாய்க்கிழமை) இரவு வரை மூன்று வேளையும் உணவு சமைத்து எந்த விதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் முகம் தெரியாத எங்கள் அனைவருக்கும் பசியாற்றினார்கள்.

இரயிலில் இருந்த குழந்தைகள், ' கிராம மக்கள் மாட்டில் பால் கறந்து அதைக் காய்ச்சி இரயிலில் இருந்த ஒவ்வொரு பெட்டியாகப் போய் பால் தேவைப் படுபவர்கள் வாங்கிக் கொள்ளுங்கள் என்று குழந்தை வைத்திருந்த ஒவ்வொருவரிடமும் கேட்டுக்கேட்டுக் கொடுத்தார்கள். இரயில் இருந்த நாங்கள் அந்தக் கிராம மக்களுக்கு மிகுந்த கடமைப்பட்டுள்ளோம்" என்று.

தங்கள் அடையாளம் எதையும் காட்டிக் கொள்ளாமல், மனிதநேயத்தை மட்டுமே காட்டி இருக்கிறார்கள் அந்த திருவைகுண்டத்துக் கிராம மக்கள்.

அதே நாளில் டில்லியில் பிரதமரைச் சந்தித்த தமிழ்நாடு முதலமைச்சர்

வெள்ளப் பாதிப்புக்கு ரூ.12,659 கோடி நிவாரணம் வழங்குமாறும், அதில் தற்காலிகமாக ரூ.7,033 கோடியை. வழங்க வேண்டும் என்றும், பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூ.2,000 கோடியை அவசர நிவாரண நிதியாக வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

சில நாள்களுக்கு முன்னர் மிக்ஜாம் புயல் பாதிப்பு முதல்கட்ட நிவாரணமாக முதல்வர் கேட்ட 6050 கோடிக்குப் பதிலாக வெறும் 450கோடி மட்டுமே கொடுத்தார் பிரதமர். இப்பொழுது தென்மாவட்டங்களுக்கும் சேர்த்து நிவாரண நிதியைக் கேட்டுள்ளார் முதல்வர்.

திருவைகுண்ட கிராம மக்கள் காட்டிய மனிதநேய உதவியைப் போல, புதுடில்லிப் பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலின் கோரிய நிவாரண நிதியை விடுவிப்பார். என்று நம்புவோம்.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408




**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

**2024ஆம் ஆண்டு நாள்காட்டி**

**(கழிவுத்தொகை உண்டு)**

**தொடர்புக்கு:**
**9940407468**
**044-24726408**

# புறமுதுகிட்டோடும் மோடியும், அமித்ஷாவும்!

சாரதாதேவி

நடைபெற்றுவரும் குளிர்காலக் கூட்டத்தொடரில், புதிய பாராளுமன்ற வளாகத்தில், டிசம்பர் 13 அன்று இரண்டு இளைஞர்கள், திடுப்பெனப் பார்வையாளர் மாடத்திலிருந்து பாராளுமன்ற மக்களவைக்குள் குதித்தார்கள். வண்ணப் புகையை வீசிவிட்டு ஓடினார்கள். புகையும், எரிச்சலும், அச்சமும் சூழ, உறுப்பினர்கள் திகைக்க, சிலர் அவர்களை மடக்கிப் பிடித்துக் காவலர்களிடம் ஒப்படைத்தார்கள்.

அவர்கள் மைசூரு பா.ஜ.க. மக்களவை உறுப்பினர் பிரதாப் சிம்ஹாவின் பரிந்துரையின் பேரில் பார்வையாளர் அனுமதிச் சீட்டு பெற்று உள்ளே வந்தவர்கள் என உடனடியாகக் கண்டுபிடித்துவிட்டார்கள்.

இப்போது என்ன செய்யவேண்டும்? யார் அவர்கள்? ஏன் அந்த உறுப்பினர் அனுமதி சீட்டு கொடுக்க பரிந்துரை செய்தார்? அல்லது ஒரு நாட்டின் உச்ச சனநாயக அமைப்பான பாராளுமன்றத்திற்கே பாதுகாப்பு உறுதி செய்யப்படவில்லை என்றால் பாதுகாப்பு குறைபாடுகளைச் சரிசெய்ய வேண்டுமா, இல்லையா? அதைத்தான் பாராளுமன்றத்தில் சொல்லச் சொன்னார்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்த மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள். பதில் வரவே இல்லை. அதனால் பதாகைகள் ஏந்தி அவையின் கவனத்தை ஈர்த்தார்கள்.

இந்தக் காரணங்களால், 14 அன்று 13 மக்களவை உறுப்பினர்கள், 1 மாநிலங்களவை உறுப்பினர் (திரிணாமூல் காங்கிரஸின் டெரிக் ஓ ப்ரைன்), 18 அன்று 33 மக்களவை உறுப்பினர்கள், 45 மாநிலங்களவை உறுப்பினர்கள், 19 அன்று 49 மக்களவை உறுப்பினர்கள், 20 அன்று 2 மக்களவை உறுப்பினர்கள் என ஆக மொத்தம், 97 மக்களவை உறுப்பினர்கள் - 46 மாநிலங்களவை உறுப்பினர்கள் என 143 பேரை பணி நீக்கம் செய்திருக்கிறார்கள், ஓம்பிர்லாவும், ஜகதீப் தன்கரும் முறையே மக்களவையிலும் மாநிலங்களவையிலும்! அதுவும் தவணை முறையில்! இதில் கனிமொழி, சுப்ரியாசுலே, சு.வெங்கடேசன், திருமாவளவன், ஃபரூக் அப்துல்லா என எல்லா துடிப்பான பேச்சாளர்களும் அடக்கம். ஏற்கனவே மஹுவா மொய்த்ராவின் குரலை அடக்கிவிட்டார்கள்.

இதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் ஜான் பிரிட்டாஸ், ஏ.ஏ.ரஹீம் உள்ளிட்ட 11 உறுப்பினர்கள், உரிமைக் குழு அறிக்கை அளிக்கும் வரை 3 மாதங்களுக்கு உள்ளே வரக்கூடாது என கடுமையான தண்டனை வேறு!

இந்த அடாவடி செயல்களை விட மோடியும், அமித்ஷாவும் மக்களவையில் விளக்கம் தருவது கடினமான வேலை போலும்?!

மோடியும், அமித்ஷாவும் சிக்கல்களுக்கு புறமுதுகிட்டு ஓடுவது புதிதா என்ன?

எட்டு மாதங்களாக மணிப்பூர் பற்றி எரிந்து கொண்டு இருக்கிறது. இத்தனைக்கும் அது பா.ஜ.க. ஆளும் மாநிலம் தான். இன்னும் இந்திய நாட்டின் பிரதமருக்கு அந்த மாநிலத்தில் போய் கால் வைக்க நேரமில்லை. மீண்டும் சூரசந்த்பூர் மாவட்டத்தில் 144 தடை உத்தரவு போடப்பட்டிருக்கிறது. பெண்கள் அம்மணப்படுத்தப்பட்டு ஊர்வலம் இழுத்து வரப்பட்ட காணொளிக் காட்சிகள் மொத்த இந்தியப் பெண்களையும் அவமானப்படுத்தியது. பாராளு மன்றத்தில் அது தொடர்பாகக் கேட்கப்பட்ட ஒரு கேள்வியைக் கூட மோடியும், உள்துறை அமைச்சரும் எதிர்கொள்ளவில்லை.

இதற்கு முன்பு இரண்டு ஆண்டுகளாக விவசாயிகள் போராடினார்களே? அப்போது மட்டும் மோடி வந்து பார்த்துவிட்டாரா என்ன?

ஆயிரக்கணக்கில் தலித் வன்கொடுமைகள் அரங்கேறுகின்றன. இசுலாமியர்கள் அச்சத்தில் வைக்கப்படுகிறார்கள். கேள்வி கேட்டவர்களின் வீடுகள் இடிக்கப்பட்டன. ஊடகவியலாளர்கள் ஒடுக்கப்படுகிறார்கள். விலைக்கு வாங்கப் படுகிறார்கள்.

எந்த சிக்கலுக்காவது இதுவரை ஊடகங்களைச் சந்தித்து பதில் சொல்லி இருக்கிறாரா? நடுநிலை ஊடகங்கள் வாங்கப்பட்டுவிட்ட போதும், அவருக்கு அச்சம் தீர்ந்தபாடில்லை.

நிறைய சிக்கல் இருந்தால் மோடி வெளிநாடு சென்றுவிடுவார். விருந்துகளில் கலந்துகொண்டு தன் இறுக்கத்தைத் தளர்த்திக் கொள்வார்.



இந்த நிலையில் தான் ஒரு பெரும் கட்டிடத்தில் புதிதாகத் தொடங்கப்பட்ட நாடாளுமன்றம் ஆட்கள் இல்லாமல் வெறிச்சோடிப் போயிருக்கிறது. மக்கள் பிரதிநிதிகளால் விவாதிக்கப் பட வேண்டிய பல மசோதாக்கள் சட்டமாக்கப் பட உள்ளன. விவாதங்களே கசக்கும் சர்வாதிகாரர்களுக்கு இந்தச் சூழல் தானே வேண்டும்? மனித உரிமைகளுக்கு உலைவைக்கும், பாசிச, மக்கள் விரோத திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றிக்கொள்வார்கள்.

மிக முக்கியமான சட்டங்களான குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973, இந்திய சாட்சியங்கள் சட்டம் 1872, இந்தியத் தண்டனைச் சட்டம் 1860 ஆகியவற்றுக்கு மாற்றாக புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த சூழலில், மனித உரிமைகளுக்காக குரலெழுப்பக் கூடிய ஃபரூக் அப்துல்லா, டெரக் ஓ ப்ரைன், சு.வெங்கடேசன், சுப்ரியாசுலே, கனிமொழி, திருமாவளவன் என அனைவரையும் வெளியேற்றியதன் பின்னணியை நாம் கவனத்தில் வைக்கவேண்டும்.

மோடியும், அமித்ஷாவும் புறமுதுகிட்டு ஓடுவதே எதிர்ப்பற்ற ஒரு புறச்சூழலை உருவாக்கவே! ஆனாலும் அகச் சூழல் அவர்களைத் துரத்தும். அது அவர்களை உள்ளிருந்து பலவீனப்படுத்தும். மௌனமாக இருக்கும் மக்கள், மௌனித்து விடமாட்டார்கள். 2024இல் தக்க பதிலளிப்பார்கள்! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian